**OS.NO: 24/2020**

**PW1 : விஜயா**

நாள் : 11.06.2025

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

**1 முதல் 3 பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை –**

எனது தந்தை பெயர் ஆறுமுகம் எனது தாயார் குப்பம்மாள் என்றால் சரிதான் எனது தந்தை 21.04.2008 அன்று இறந்து விட்டார்என்றால் சரிதான். எனது தந்தை இறந்த போது 2 முதல் 5 பிரதிவாதிகளையும் மற்றும் என்னையும் வாரிசுகளாக விட்டு விட்டு இறந்தால் என்றால் சரிதான். அவர் இறக்கும் போது ஐவர்க்கும் திருமணம் செய்தார் என்றால் சரிதான். 6 ம் பிரதிவாதி பிறந்தபிறகு தான் ஊனம் ஏற்பட்டது. அதனால் திருமணம் செய்து வைக்கவில்லை என்றால் சரிதான். ஆனால் எனது தந்தைக்கு 6 ம் பிரதிவாதிக்கு சீரும் சிறப்புமாக திருமணம் செய்து வைக்க விருப்பட்டார் என்றால் சரிதான். எனது தந்தை உயிருடன் இருந்த போது 2 பெண் பிள்ளைகளுக்கு நன்றாக நகைகள் போட்டு சீரும் சிறப்புமாக திருமணம் செய்து வைத்தார் என்று சொன்னால் சரிதான். 3 ஆண்பிள்ளைகளுக்கும் எனது தந்தை சீரும் சிறப்புமாக திருமணம் செய்து வைத்தார். எனது தங்கை 6 ம் பிரதிவாதிக்கு 1 மற்றும் 2 பிரதிவாதிகள் சேர்ந்து ரூ.15,00,000 செலவு செய்து வைத்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. எனது தங்கை செல்வியை விசாரித்தால் உண்மை நிலவரம் தெரியவரும் என்று சொன்னால் சரிதான். நான் வழக்கிற்காக பொய்சாட்சியும் அளிக்கிறேன் என்றும் 1 மற்றும் 2 பிரதிவாதிகள் சேர்ந்துதான் செல்வி திருமணம் செய்து வைத்தார்கள் என்று சொன்னால் சரியல்ல.

**1 முதல் 3 பிரதிவாதிகளின் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்குவிசாரணையின் தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

S/d. K. S. Jayamangalam,
I Additional District Court,

Ranipet.